# ஜாடிக்கேத்த மூடியாக மோடிக்கேத்த முரட்டு அடிமையாக எடப்பாடி பழனிச்சாமியை இந்தியாவே பார்த்துக் கொண்டிருக்கிறது!

## கள்ளக்குறிச்சி மாவட்டக் கழக சார்பு அணிகள் சந்திப்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**கள்ளக்குறிச்சி, மார்ச் 18 -**

**கள்ளக்குறிச்சி வடக்கு மற்றும் தெற்கு மாவட்டக் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். சமூகத்தின் ஒவ்வொரு தரப்பினரையும் சார்பு அணிகளின் நிர்வாகிகள் சந்தித்து, திராவிட மாடல் அரசின் சாதனைகளைப் புள்ளி விவரத்துடன் எடுத்துக் கூறி ஆதரவு திரட்டுமாறு கேட்டுக்கொண்டார்.**

**அப்போது அவர், "ஜாடிக்கு ஏத்த மூடி என்று ஒரு பழமொழி சொல்லுவார்கள். இன்று மோடிக்கு ஏத்த ஒரு அடிமையாக எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் உருவெடுத்து இருக்கிறார். நான் பல முறை நகைச்சுவையாகவே சொல்லியிருக்கிறேன். முரட்டு பக்தர்கள் பார்த்திருக்கிறோம், முரட்டு தொண்டர்கள் கேள்விப்பட்டு இருக்கிறோம். ஆனால், இன்று இந்தியாவே ஒரு முரட்டு அடிமையை எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் ரூபத்தில், பார்த்துக்கொண்டு இருக்கிறது. இதையெல்லாம் நாம் தொடர்ந்து மக்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டும்" என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய சிறப்புரையின் விவரம் வருமாறு:**

உங்களையெல்லாம் தனித்தனியாக பல இடங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் சந்தித்திருந்தாலும், இன்று ஒரே அரங்கத்தில் இந்த சார்பு அணி நிர்வாகிகள் சந்திப்பில் சந்திப்பது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. நேற்று காலை சென்னையிலிருந்து கிளம்பி சாலை வழியாக கடலூர் மாவட்டம், அதன்பிறகு அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களையெல்லாம் முடித்துவிட்டு, இன்று மதியத்துக்கு மேல்தான் கள்ளக்குறிச்சிக்கு வருகை தந்திருந்தேன்.

### ஆற்றல் தொற்றிக்கொண்டது

தொடர் சுற்றுப்பயணம் காரணமாகத் தொடர்ந்து பேசிக்கொண்டே இருக்கிற காரணத்தால் கொஞ்சம் சோர்வு இருந்தது. ஆனால், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கால் எடுத்து வைத்த உடனே அந்த சோர்வு, அத்தனையும் காணாமல் போய்விட்டது. எங்கேயிருந்துதான் அந்த ஆற்றல் வரும் என்று எனக்குத் தெரியவில்லை. உங்கள் ஆற்றல் அப்படியே என்னைத் தொற்றிக் கொண்டது. அது இப்பொழுது மட்டும் இல்லை, எப்பொழுது கள்ளக்குறிச்சிக்கு வந்தாலும் இதுதான் நடக்கும். அந்த அளவுக்கு ஒரு சிறப்பான வரவேற்பைக் கொடுத்திருக்கிறீர்கள். அதற்கு முதலில் உங்களின் மாவட்டக் கழக செயலாளர்கள் வசந்தம் கார்த்திகேயன் அவர்களுக்கும், அண்ணன் உதயசூரியன் அவர்களுக்கும், சிறப்பான வரவேற்பு கொடுத்த கழகத்தின் அனைத்து நிர்வாகிகளுக்கும், இளைஞர் அணி சகோதரர்களுக்கும், நண்பர்களுக்கும், தாய்மார்களுக்கும், கலைஞரின் உடன்பிறப்புகள் அனைவருக்கும் முதலில் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று தி.மு.கவின் வயது 76. பவள விழா கொண்டாடிவிட்டு 76வது வயதில் நாம் நடை போட்டுக்கொண்டு இருக்கிறோம். 76 வயதிலும் இன்றும் அதே ஆற்றலோடு, அதே துடிப்போடு இன்றும் களத்தில் நின்று நாம் பணியாற்றி கொண்டு இருக்கிறோம். வெற்றி மேல் வெற்றியாகக் குவித்துக் கொண்டிருக்கிறோம். அதற்கு காரணம் இங்கே வந்திருக்கக்கூடிய உடன்பிறப்புகள் நீங்கள்தான். நீங்கள் இல்லாமல் இந்த வெற்றி கிடையாது.

கலைஞரைப் பற்றி பேசும்போது சொல்வோம். திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி வாய்ப்பை இழந்திருக்கலாம், ஆனால் தமிழ்நாட்டில் மட்டும் இல்லை, இந்தியாவிலேயே ஒரே தலைவர், தான் நின்ற தேர்தல் அனைத்திலும் வென்ற ஒரே தலைவர் நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். அதே மாதிரி நம் தலைவருக்கும் ஒரு பெருமை இருக்கிறது. தான் இயக்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்ற பின்னர் நாம் சந்தித்த அத்தனை தேர்தலையும் வெற்றியை மட்டுமே பெற்றுக்கொண்டு இருக்கக்கூடிய ஒரே தலைவர் நம் தலைவர். எப்படி தலைவரின் பெருமை, கலைஞரின் பெருமையெல்லாம் பேசும்போது அந்த வெற்றிக்குக் காரணம் இங்கே வந்திருக்கக்கூடிய உடன்பிறப்புகளாகிய நீங்கள்தான். நீங்கள் இல்லாமல் அந்த வெற்றி சாத்தியம் கிடையாது.

### வெற்றி மேல் வெற்றி

இன்று அணிகளெல்லாம் ஒன்றாகச் சேர்ந்திருக்கிறோம். ஆங்கிலத்தில் `விங்ஸ்' என்று சொல்வோம். `யூத் விங்', `ஸ்டூடண்ட்ஸ் விங்', `ஐ.டி விங்' என்று சொல்கிறோம். `விங்ஸ்' என்றால் தமிழில் சிறகுகள் என்று அர்த்தம். ஒரு பறவை உயரப் பறக்க வேண்டும் என்றால் அதன் சிறகுகள் சரியாக வேலை செய்ய வேண்டும். அப்படித்தான் நீங்களெல்லாம் சரியாக வேலை செய்வதால்தான் வெற்றி மேல் வெற்றியைப் பெற்று நம் கழகம் இன்று உயர உயர பறந்து கொண்டு இருக்கிறது. அணிகள் என்பது ஒரு வலைப் பயிற்சி மாதிரி. எடுத்த உடனே யாரையும் முதன்மை ஆட்டத்தில் ஆட விடமாட்டார்கள். அதற்கு முதலில் பயிற்சி எடுக்க வேண்டும். அது மாதிரி நம் தாய்க்கழகத்துக்குப் போவதற்கு முன்பு உங்களுக்குக் கொடுக்கக்கூடிய அந்தப் பயிற்சிதான் இன்று நீங்கள் இருக்கக்கூடிய இந்த அணிகள்.

### ஒரே வழி உழைப்புதான்

இன்று அணிகளில் சிறப்பாகச் செயல்பட்டவர்கள், கழகப் பணியாற்றியவர்கள் இன்று பல்வேறு உயர்ந்த பொறுப்புகளில் மாவட்ட கழக செயலாளர்களாக, பொறுப்பாளர்களாக, மேயர்களாக, துணை மேயர்களாக, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளாக, அமைச்சர்களாக ஏன் இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாட்டுக்கு முதல மைச்சரைக் கொடுத்ததே நம் தி.மு.கவின் இளைஞர் அணிதான். தி.மு.கவின் பொதுச்செயலாளரைக் கொடுத்தது தி.மு.கவின் மாணவர் அணிதான். எனவே உங்களின் அணிகளில் நீங்கள் சிறப்பாகச் செயல்பட்டீர்கள் என்றால் நிச்சயம் உங்களுக்கான அங்கீகாரத்தைச் சரியான நேரத்தில், நம் தலைவர் அவர்கள் நிச்சயம் கொடுப்பார்கள். அந்த வாக்குறுதியை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். ஆகவே சார்பு அணி தானே என்று யாரும் சாதாரணமாக எண்ணிவிடக்கூடாது. சார்பு அணி என்றால் நாம் தலைமை கழகத்தின் மேல் சார்ந்து இருக்கிறோம் என்று அர்த்தம் கிடையாது. அதை நாம் மாற்றிக் காட்ட வேண்டும். தலைமை கழகம்தான், தாய்க்கழகம்தான் நம் மேல் சார்ந்து இருக்கிறது என்கிற நிலைமையை உருவாக்க வேண்டும். அதற்கு ஒரே வழி நம் உழைப்புதான், நம் அணியின் செயல்பாடுகள்தான். ஆகவே எதைப் பற்றியும் கவலைப்படாமல் களப்பணியில் நீங்கள் கவனம் செலுத்துங்கள். நான் எந்த மாவட்டத்துக்குச் சென்றாலும், தொடர்ந்து சுற்றுப்பயணம் செல்லும்போது எந்த மாவட்டத்துக்கு சென்றாலும் இளைஞர் அணி நிர்வாகிகளைச் சந்திப்பது வழக்கம்.

### இளைஞர் அணி நிர்வாகிகள்

குறிப்பாக இந்த கள்ளக்குறிச்சி இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு நன்றி சொல்லவேண்டும். சமீபத்தில், திருவண்ணாமலையில் மிகப்பெரிய ஒரு இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சியை மாநாடு போல நடத்தினோம். வடக்கு மண்டலத்தில் இருக்கக்கூடிய ஒரு லட்சத்து இருபதாயிரம் நிர்வாகிகள் அனைவரையும் வரவழைத்து, நம் தலைவர் அவர்களுக்கு அறிமுகப் படுத்தினோம். தலைவர் அவர்கள் உரையாற்றும்போது வாழ்த்திப் பேசினார்கள். திருவண்ணாமலை சந்திப்பு, மாநாடு போல நடந்தது. அதைச் சிறப்பாக நடத்திக் கொடுத்த பக்கத்து மாவட்டமான இந்தக் கள்ளக்குறிச்சி மாவட்டத்துக்கு நான் இந்த நேரத்தில் என் நன்றியை சொல்லியாக வேண்டும். எனவே, நான் உங்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம், களப்பணியில் நம் கவனம் இருக்க வேண்டும். தைரியமாக மக்களைச் சந்தியுங்கள். இந்தியாவில், இப்படி தினமும் நேரடியாக மக்களைச் சந்திக்கும் முதலமைச்சரை யாரும் பார்த்திருக்க மாட்டார்கள். எதனால் சந்திக்கிறோம்? தைரியத்தோடு சந்திக்கிறோம். நிச்சயமாக நான் அடித்து ஆணித்தரமாகச் சொல்கிறேன், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஒவ்வொரு வீட்டுக்கும் நம் அரசின் ஏதாவது ஒரு திட்டம் நிச்சயம் ஒவ்வொரு வீட்டுக்கும் சென்றடைந்திருக்கும்.

சில திட்டங்களை மட்டும் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆட்சி பொறுப்பேற்ற உடன் நம் தலைவர் இட்ட முதல் கையெழுத்து மகளிருக்கான கையெழுத்து – மகளிர் விடியல் பயணத் திட்டம். முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தின் மூலமாக ஒவ்வொரு நாளும் 22 லட்சம் குழந்தைகள் பயன்பெறுகிறார்கள். அரசுப் பள்ளியில் படித்து எந்தக் கல்லூரியில் சேர்ந்தாலும், மாணவனாக இருந்தால் தமிழ்ப்புதல்வன் திட்டம், மாணவியாக இருந்தால் புதுமைப் பெண் திட்டம் வாயிலாக மாதம் ஆயிரம் ரூபாயை நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார்கள். இதுவரை 12 லட்சம் மாணவ மாணவிகள் இந்த திட்டங்களின் மூலமாக பயன்பெற்றுள்ளார்கள்.

### 10 லட்சம் மடிக்கணினிகள்

நம் தலைவர் அவர்கள் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு 10 லட்சம் மடிக்கணினிகளை கொடுத்திருக்கிறார். இது எல்லாவற்றிற்கும் மேலாக ஒட்டுமொத்த இந்தியாவே திரும்பிப் பார்க்கிற திட்டம் இன்று எல்லா மாநிலங்களும் போட்டி போட்டுக்கொண்டு இதை அறிவித்துக்கொண்டு இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் மட்டும் இல்லை எல்லா மாநிலங்களும், என்ன திட்டம் என்றால் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம். இன்று மூன்று வருடங்களாக ஒரு கோடியே 32 லட்சம் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் உரிமைத் தொகையை நம் தலைவர் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்.

கடந்த மாதம் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மூன்று மாதத்துக்கும் சேர்த்து 3,000 ரூபாய், கோடை கால சிறப்பு நிதி 2,000 ரூபாய் என்று ஒரே தொகையாக 5,000 ரூபாய் ஒரு கோடியே 32 லட்சம் மகளிருக்கு, ஒரு கோடியே 32 லட்சம் குடும்பங்களுக்கு நம் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கிறார்.

### தலைசிறந்த மாநிலம்

இன்னொரு வாக்குறுதியும் கொடுத்திருக்கிறார். இன்று பல்வேறு தரப்பினர் என்ன வாக்குறுதி வேண்டுமானாலும் கொடுக்கலாம், ஆனால் மக்கள் நம்புவார்களா? நம் தலைவர் கொடுத்த வாக்குறுதியை மக்கள் நம்புவார்கள். ஏனென்றால் சொன்னதைச் செய்து காட்டக்கூடிய அரசு திராவிட மாடல் அரசு. இப்போது மகளிர் உரிமைத் தொகை 1,000 ரூபாய் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். மீண்டும் திராவிட மாடல் ஆட்சி 2.0 அமைந்த உடனே மகளிர் உரிமைத் தொகையை உயர்த்தி, 2,000 ரூபாய் கொடுப்பேன் என்று நம் தலைவர் அவர்கள் வாக்குறுதி கொடுத்து இருக்கிறார்கள். அதனால்தான் இன்று இந்தியாவிலேயே தலைசிறந்த மாநிலமாக, வளருகின்ற மாநிலமாக முதல் முறையாக இரட்டை இலக்க வளர்ச்சி பெற்று, 11.19 சதவிகிதத்துடன் நம் தமிழ்நாடு இன்று இந்தியாவிலேயே முதல் இடத்தைப் பிடித்து இருக்கிறது. இந்த ஐந்து வருடத்தில் 24 லட்சம் பட்டாக்களைக் கொடுத்திருக்கிறோம்.

அ.தி.மு.க. ஆட்சியில் 471 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மட்டுமே போடப்பட்டன. ஆனால், நம் தி.மு.க. ஆட்சியில், ஐந்து வருடத்தில் 1,190 ஒப்பந்தங்கள் போடப்பட்டு இருக்கின்றன. கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகம். கடந்த கால அ.தி.மு.க ஆட்சியில் ஈர்த்த முதலீடு 4 லட்சம் கோடி. நம் தி.மு.க ஆட்சியில் 13 லட்சம் கோடி ரூபாய்க்கான முதலீடுகளை ஈர்த்து இருக்கிறோம்.

2016–21 அ.தி.மு.க ஆட்சியில் தமிழ்நாட்டில் கொண்டுவரப்பட்ட சிப்காட் தொழிற்சாலை மொத்தம் நான்கே நான்குதான். நம் ஐந்தாண்டு கால ஆட்சியில் 33 புதிய சிப்காட்டுகளை நாம் தமிழ்நாட்டுக்குக் கொடுத்திருக்கிறோம். வேளாண் துறையை எடுத்துக்கொண்டீர்கள் என்றால், 2016–21 அ.தி.மு.க ஆட்சியில் 57 லட்சம் ஹெக்டேர் விவசாய சாகுபடி. ஆனால் நம் ஐந்து வருட ஆட்சியில் அதை 62 லட்சம் ஹெக்டேராக உயர்த்தி இருக்கிறோம். ஐந்து வருடத்தில் 5 லட்சம் ஹெக்டேர் உயர்த்திக் காட்டி இருக்கிறோம்.



வெளிநாடுகளுக்கு சென்று உயர்கல்வி படிக்க ஒடுக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவி செய்ய ஒரு திட்டம், அண்ணல் அம்பேத்கர் உதவித் தொகைத் திட்டம். இந்தத் திட்டத்தில் முந்தைய அ.தி.மு.க ஆட்சியில் இரண்டே பேர்தான் பயன்பெற்றார்கள். ஆனால் நம் ஆட்சியில் 386 மாணவர்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் 160 கோடி ரூபாய் நம் தலைவர்கள் கொடுத்திருக்கிறார்.

### கள்ளக்குறிச்சி திட்டங்கள்

கள்ளக்குறிச்சி மாவட்டத்திலும் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன. 200 ஏக்கரில் உளுந்தூர்பேட்டை சிப்காட் உருவாக்கப்பட்டு 2,000 பேருக்கு வேலை வாய்ப்பு உறுதி செய்து இருக்கிறோம். 260 கோடி ரூபாய் மதிப்பில் கள்ளக்குறிச்சி – திருவண்ணாமலை சாலை இன்று நான்கு வழிச் சாலையாக மாற்றப்பட்டு மேம்படுத்தப்பட்டு இருக்கிறது.

தியாகதுருகம் – திருவண்ணாமலை சாலை சுமார் 11 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டு இருக்கிறது. கள்ளக்குறிச்சி நகராட்சியில் 167 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டம் இன்று நிறைவேற்றப்பட்டு இருக்கிறது.

கல்வராயன் மலையில் 22 கிராமங்களுக்கு பயனளிக்கின்ற வகையில், 100 கோடி ரூபாய் செலவில் சாலைப் பணிகள் இன்று நடந்திருக்கிறது. கள்ளக்குறிச்சியில் 16 கோடி ரூபாய் செலவில் புதிய பேருந்து நிலையம் நாம் திறந்து வைத்திருக்கிறோம். 15 கோடி ரூபாய் செலவில் மாவட்ட விளையாட்டு வளாகம் இப்போது கட்டப்பட்டுக்கொண்டு இருக்கிறது. இப்படி ஏராளமான திட்டங்களை நம் அரசு இந்தக் கள்ளக்குறிச்சி மாவட்டத்துக்குச் செய்து கொடுத்திருக்கிறோம். ஆனால் ஒன்றிய அரசு என்ன செய்கிறது? நமக்கான நிதியைக் கொடுக்கிறார்களா? எல்லா விதத்திலும் மாநில அரசு செயல்படக்கூடாது, தமிழ்நாடு செயல்படக்கூடாது என்று ஒன்றிய அரசு வேலை பார்த்துக்கொண்டு இருக்கிறது. கல்வி நிதியை, கல்வி உரிமையைப் பறிக்கிறார்கள். மொழி உரிமையைப் பறிக்கிறார்கள், நிதி உரிமையைப் பறிக்கிறார்கள். சென்ற வருடம் புதிய கல்விக் கொள்கையை ஒன்றிய அரசு கொண்டு வந்தது. இந்தியாவில் இருக்கக்கூடிய அனைத்து மாநிலங்களும் ஏற்றுக்கொண்டது.

### ஒன்றிய அரசு தரும் தொல்லைகள்

புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான் ஒன்றிய அரசு மாநில அரசுக்குத் தர வேண்டிய நிதிப்பகிர்வைக் கொடுப்போம் என்று மற்ற மாநிலங்கள் ஏற்றுக்கொண்டன. புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டால், மீண்டும் தமிழ்நாட்டுக்குள் இந்தியும் சமஸ்கிருதமும் குறுக்கு வழியில் வரும். புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டால் மீண்டும் குலக்கல்வி திட்டத்தைத் தமிழ்நாட்டுக்குள் திணிக்கப் பார்க்கிறார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று சொன்னார்.

இப்படி ஒன்றிய அரசு பல்வேறு வகையில், தமிழ்நாட்டுக்குத் தொல்லை கொடுத்துக்கொண்டே இருக்கிறது. ஆனால் இதையெல்லாம் எதிர்த்து கேட்ட வேண்டயர் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி. அவர் கேட்பாரா? என்றைக்காவது கேட்டிருக்கிறாரா? எதிர்த்துப் பேசியிருக்கிறாரா? பா.ஜ.க. கூட்டணி என்றைக்காவது எதிர்த்துப் பேசியிருக்கிறாரா? மாட்டார்.

### மோடிக்கு ஏத்த அடிமை

ஒரு பழமொழி சொல்லுவார்கள் ஜாடிக்கு ஏத்த மூடி என்று சொல்வார்கள். இன்று மோடிக்கு ஏத்த ஒரு அடிமையாகத் திரு. எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் உருவெடுத்து இருக்கிறார். நான் பலமுறை நகைச்சுவையாகவே சொல்லியிருக்கிறேன். முரட்டு பக்தர்கள் பார்த்திருக்கிறோம், முரட்டு தொண்டர்கள் கேள்விப்பட்டு இருக்கிறோம். ஆனால், இன்று இந்தியாவே ஒரு முரட்டு அடிமையை எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் ரூபத்தில், பார்த்துக் கொண்டு இருக்கிறது. இதையெல்லாம் நாம் தொடர்ந்து மக்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டும்.

காவிக் கூட்டம் தமிழ்நாட்டுக்கும் காவி பூச நினைக்கிறார்கள். ஆனால். தி.மு.க இருக்கிற வரைக்கும் நிச்சயம் அது அவர்களால் செய்ய முடியாது. இன்று தேர்தல் வருகிறது என்பதனால், நம் சார்பு அணிகளையெல்லாம் கூட்டி ஒருங்கிணைத்து இன்று இந்த நிகழ்ச்சி நடத்திக்கொண்டு இருக்கிறோம். நாம் நம் அணிகளையெல்லாம் கூட்டி அவர்களோடு பேசிக் கொண்டு இருக்கிறோம். அதே மாதிரி பா.ஜ.க.வும் அவர்களின் சார்பு அணிகளை இன்று தேர்தல் வேலையில் இறக்கி விட்டு இருக்கிறார்கள்.

அமலாக்கத்துறை (ED), வருமான வரித்துறை (I.T), மத்திய புலனாய்வுத் துறை (CBI), தேர்தல் ஆணையம் (Election Commission) இவர்கள்தான் பா.ஜ.க.வின் சார்பு அணிகள். அதனால்தான் சி.பி.ஐ., அமலாக்கத் துறை, வருமான வரித்துறை இவர்களையெல்லாம் வைத்து மிரட்டித்தான் இன்று ஒரு கூட்டணியையே அவர்கள் அமைத்து இருக்கிறார்கள்.

### மக்களிடம் பேசுங்கள்

நான் உங்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம் இன்று தேதி 12. வருகின்ற 16ஆம் தேதி தேர்தல் தேதி அறிவிப்பு என்று செய்திகள் வருகின்றன. அநேகமாக ஏப்ரல் 16–லிருந்து 20–ஆம் தேதிக்குள் தேர்தல் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நம்மிடம் இருப்பது இன்னும் குறைந்தது 35–லிருந்து 40 நாட்கள்தான். இந்த 40 நாட்கள் நமக்கு மிக மிக முக்கியம். இந்த 40 நாட்கள் நாம் செய்கின்ற பணி அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு தமிழ்நாட்டைக் காக்கப் போகின்ற பணி என்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். அரசின் சாதனைகளை மக்களிடம் பேசுங்கள். கழகத்தின் வரலாற்றை மக்களிடம் கொண்டு சேருங்கள். நீங்கள் ஒவ்வொருவரும் அடுத்த வருகிற 40 நாள்கள் குறைந்தது ஒரு 50லிருந்து 60 பேரை நேரடியாகச் சந்தித்துப் பேசுங்கள். மக்களுடன் நேரடியாக நெருங்கிய தொடர்பில் இருங்கள். அவர்களின் குறைகளைக் காது கொடுத்துக் கேளுங்கள். நம்மால் குறைகளை நிவர்த்தி செய்ய முடியவில்லை என்றாலும் அவர்களின் குறைகளைக் கேட்டாலே, அவர்களின் பாதி பாரம் குறையும்.

நம் மேல் ஒரு நம்பிக்கை வரும். நிச்சயம் அந்த நம்பிக்கையைப் பெற்று விட்டீர்கள் என்றால் உங்களின் கட்டுப்பாட்டில், உங்களின் செல்வாக்கில் ஒரு 50லிருந்து 60 வாக்காளர்கள் நீங்கள் சொல்கிறவர்களுக்கு வாக்களிக்கிறவர்களாக இருந்தார்கள் என்றால், யாராலும் உங்களின் வளர்ச்சியைத் தவிர்க்கவோ தடுக்கவோ நிச்சயம் முடியாது.

அந்த நிலையை நீங்கள் உருவாக்கிக்கொள்ளுங்கள். பொதுவாக தி.மு.ககாரன் தேர்தல் என்று வந்துவிட்டால் ஒரு தேநீரைக் குடித்துவிட்டு இரவு பகலாக வேலை பார்ப்பான் என்று எல்லோரும் சொல்வார்கள். அதை நிரூபித்துக் காட்ட வேண்டிய நேரம் வந்திருக்கிறது என்பதை நீங்கள் மனதில் வைத்துக்கொள்ளுங்கள். உங்களுக்கான பணிகளை நீங்கள் பிரித்துக் கொள்ளுங்கள்.

இளைஞர் அணியினர், நாங்கள் ஒவ்வொரு இளைஞராக சந்தித்துப் பிரச்சாரத்தை மேற்கொண்டு இருக்கிறோம். அதே மாதிரி மாணவர் அணியினர் வந்திருப்பீர்கள். உங்கள் பகுதியில் இருக்கக்கூடிய மாணவர்களைப் பார்த்துப் பேசுங்கள். இந்த ஐந்து வருடத்தில் மாணவர்களின் கல்விக்காக என்னென்ன திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதையெல்லாம் அவர்களிடம் பேசுங்கள். அதேபோல ஐ.டி விங் ஏற்கனவே சமூக ஊடகங்களில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறீர்கள். இன்னும் தீவிரமாக நீங்கள் செயல்பட வேண்டும். நீங்களே பேசிச் சின்னச் சின்ன வீடியோக்களைத் தயார் செய்து யூடியூப்பில் பதிவேற்றுங்கள். நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு ஊடகமாக மாறுங்கள், யூடியூப் சேனலாக நீங்கள் மாறுங்கள்.

வழக்கறிஞர் அணியினர் வந்திருப்பீர்கள், லீகல் விங் வந்திருப்பீர்கள். தேர்தல் என்று வந்துவிட்டால் சட்டத்துறை மிக மிக முக்கியமானது. ஏனென்றால், வேட்புமனுத் தாக்கலில் இருந்து வாக்கு எண்ணிக்கை வரைக்கும் உங்களின் பணி மிக மிக முக்கியம்.

### முற்போக்குக் கூட்டணிதான் காவல்

சிறுபான்மை நல உரிமைப் பிரிவைச் சேர்ந்தவர்கள் வந்திருப்பீர்கள். நீங்கள் அடிமை அ.தி.மு.க.வும் பாசிச பா.ஜ.க.வும் சிறுபான்மை மக்களுக்கு என்னென்ன துரோகங்களைச் செய்து கொண்டு வருகிறார்கள் என்பதை அடுக்கி வைத்துப் பேசுங்கள். சிறுபான்மை மக்களுக்குத் திராவிட முன்னேற்றக் கழகம்தான், நம் மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிதான் என்றைக்கும் காவலாக இருக்கிறது என்பதை அவர்களிடம் தெளிவாக எடுத்துச் சொல்லுங்கள்.

மருத்துவர் அணி, பொறியாளர் அணி எல்லாம் வந்திருப்பீர்கள். உங்களின் நண்பர்களிடம் பேசுங்கள். குறிப்பாக 'இன்னுயிர் காப்போம் 48', 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தைப் பற்றிப் பேசுங்கள். விளையாட்டு மேம்பாட்டு அணி வந்திருப்பீர்கள். உங்கள் பகுதியில் இருக்கக்கூடிய விளையாட்டு வீரர்களைச் சந்தித்துப் பேசுங்கள். இந்த ஐந்து வருடத்தில் குறிப்பாக இந்தக் கடைசி மூன்று வருடத்தில் விளையாட்டுத் துறைக்கு என்னென்ன செய்திருக்கிறோம், எந்த அரசும் செய்யாத சாதனைகள் செய்திருக்கிறோம்.

விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலைவாய்ப்பு என்று ஏற்கனவே ஒரு இட ஒதுக்கீடு (Quota) 3% இடஒதுக்கீடு. அ.தி.மு.க ஆட்சியில் 10 வருடங்களில் மொத்தம் இரண்டே விளையாட்டு வீரர்களுக்குதான் வேலை வழங்கியிருக்கிறார்கள். ஆனால் இந்த இரண்டு வருடங்களில் மட்டும் விளையாட்டு வீரர்களுக்கு 300 விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலைவாய்ப்பை நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

### எல்லாருமே செய்திச் சேனல்தான்

இப்படி எத்தனையோ திட்டங்களை ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்து நம் முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள். மகளிர் அணி வந்திருக்கிறீர்கள். மற்ற அணிகளுக்கெல்லாம் இல்லாத ஒரு வசதி மகளிர் அணிக்கு உண்டு. நாமெல்லாம் வீட்டு வாசல் வரைக்கும்தான் செல்ல முடியும், பிரச்சாரத்தைச் சொல்ல முடியும். ஆனால் மகளிர் அணி வீட்டுக்குள்ளும் போகலாம், சமையலறை வரை சென்று அவர்களோடு பேசலாம். அவர்களின் நம்பிக்கையை நீங்கள் பெற வேண்டும். ஆகவே நம் பிரச்சாரத்தை ஒவ்வொரு வீட்டிலிருந்தும் நாம் தொடங்க வேண்டும். ஒவ்வொரு வாக்காளரையும் பார்த்து நம் பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும்.

தீவிரமாக அதைச் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இன்று உங்களிடம் நான் வைக்கக்கூடிய இன்னொரு கோரிக்கை, தேர்தல் நேரம், நாம் அனைவரும் மக்களைச் சந்திக்கும்போது மிகுந்த கண்ணியத்துடன், கட்டுப்பாட்டுடன், கடமையுடன் செயல்பட வேண்டும். இன்று எல்லார் கையிலும் அலைபேசி இருக்கிறது. இன்று எல்லாருமே ஒரு செய்திச் சேனல்தான்.

அரசு மீது பழி சொல்ல முடியவில்லை, குற்றம் சொல்ல முடியவில்லை, முதலமைச்சர் மேல் எந்தப் பழியும் சொல்ல முடியவில்லை, தவறும் சொல்ல முடியவில்லை. யாராவது ஏதாவது தவறாகப் பேசிவிட மாட்டார்களா? அதைத் தொலைக்காட்சியில் போட்டு அதை ஒரு பூதாகரமாக ஆக்க முடியாதா என்று எல்லாரும் காத்துக்கொண்டு இருக்கிறார்கள். எனவே மிகுந்த கவனத்தோடு நாம் மக்களைச் சந்திக்க வேண்டும். எந்த வேலை செய்தாலும் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளரிடம் கலந்து ஆலோசனை செய்து அவர்களின் வழிகாட்டலைப் பெற்றுக்கொண்டு செய்யுங்கள்.

இங்கே வந்துள்ள ஒன்றிய செயலாளர் அவர்களுக்கும் ஒரு வேண்டுகோள், உங்களுக்கு ஒரு சின்ன கோரிக்கை. அணிகளில் இருந்து வந்திருப்பவர்களுக்குப் பெரிய அனுபவம் இருக்காது. அவர்களில் பலர் இன்று அரசியலுக்கே புதியவர்களாகத்தான் வந்திருப்பார்கள். ஏன் சொல்லப்போனால், முதல் தலைமுறை அரசியல்வாதியாகக் கூட இருக்கலாம். அவர்கள் ஏதாவது ஒரு சின்ன தவறு செய்துவிட்டார்கள் என்றால் அதைத் தயவுசெய்து பெரிது பண்ணாதீர்கள். அவர்களை நீங்கள் வழிகாட்டுங்கள். இந்தப் பணிகளை இன்னும் எப்படிச் சிறப்பாகச் செய்திருக்கலாம் என்று நீங்கள் அவர்களை வழிநடத்துங்கள். அணி நிர்வாகிகளை நல்ல முறையில் வழிநடத்துங்கள்.

### சார்பு அணிகளில் ஒருவனாக

நான் இன்று ஒரு துணை முதலமைச்சராகவோ, ஒரு அமைச்சராகவோ, சட்டமன்ற உறுப்பினராகவோ வரவில்லை. நானும் ஒரு அணியின் செயலாளர் என்ற முறையில், உரிமையோடு மற்ற அணிகளை எல்லாம் பார்த்து கேட்க வந்திருக்கிறேன். சார்பு அணிகளில் ஒருவனாகத்தான் உங்களைச் சார்ந்து நான் வந்திருக்கிறேன்.

நம் அணிகளுக்குள்ளே அடுத்த 40 நாட்கள் ஒரு ஆரோக்கியமான போட்டி இருக்கவேண்டும். இந்த சட்டமன்றத் தேர்தல் வெற்றிக்கு அதிகமாக உழைத்தது எந்த அணி என்று நமக்குள்ளே ஒரு போட்டி இருக்க வேண்டும். அந்தப் போட்டி ஒரு ஆரோக்கியமான போட்டியாக இருக்க வேண்டும். நமக்குள்ளே ஒன்றே ஒன்றுதான் நம் மனதில் இருக்க வேண்டும். இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி என்று பிரிந்து இருந்தாலும் கடைசியாக நாமெல்லாம் ஒரே அணி, அது கலைஞர் அணி, நம் தலைவர் அணி என்பதை நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இந்தத் தேர்தல் தமிழ்நாட்டுக்கும் டெல்லிக்குமான தேர்தல். இந்தத் தேர்தல் தமிழ்நாட்டுக்கும் டெல்லிக்குமான போர். ஒரு போரில் எல்லாரும் ஒரே நேரத்தில் சென்று சண்டை போட்டோம் என்றால் வெற்றி அவ்வளவு சுலபமாக கிடைக்காது. ஆனால், நமக்குள்ளே திட்டம் போட்டு, உத்திகள் வகுத்து, குழுக்கள் குழுக்களாகப் போருக்குச் சென்றோம் என்றால் நிச்சயம் அந்தப் போரில் வெற்றியை நாம் பார்க்க முடியும். அது மாதிரி வந்திருக்கக்கூடிய அணிகள் ஒவ்வொருவரும் ஒரு திட்டம் போட்டு, உத்தி ரீதியாக நாம் தாக்கினால், 2026 சட்டமன்றத் தேர்தல் என்ற போரில் நிச்சயம் நாம் வெற்றியைப் பெற முடியும்.

### அதிகமான வாக்கு வித்தியாசம்

எனவே நம் தலைவர் நமக்கு இலக்கு கொடுத்திருக்கிறார்கள். `வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு' என்று. ஆனால் நான் சொல்கிறேன், நம் சார்பு அணிகள் அனைவரும் சிறப்பாகச் செயல்பட்டோம் என்றால் 200 அல்ல, 234 தொகுதியிலும் வெற்றி என்பது நிச்சயம். அதற்குத் தொடக்கமாக இங்கே உங்களின் மாவட்டச் செயலாளர் வசந்தம் கார்த்திகேயன் அவர்கள் சொன்னது மாதிரி, ஏற்கனவே பெற்ற வெற்றியை விட அதாவது நான்கிற்கு மூன்று எனக் கிடைத்ததை நான்கிற்கு நான்கு, 100 சதவிகித வெற்றியை கள்ளக்குறிச்சி மாவட்டம் நிச்சயம் பெற்றாக வேண்டும். அடித்தீர்கள். இந்த முறை எதுவும் மிஸ் ஆகக்கூடாது. சென்ற முறை வாங்கிய வாக்கு வித்தியாசத்தை விட அதிகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிப் பெற வைப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. தமிழ்நாடு என்றைக்குமே `டெல்லிக்கு அவுட் ஆப் கண்ட்ரோல் தான்' என்பதை நாம் நிரூபிக்க வேண்டிய காலம் இந்தத் தேர்தல் காலம்.

எனவே வந்திருக்கக்கூடிய உங்கள் அனைவரிடமும் நான் கேட்டுக்கொள்வது கள்ளக்குறிச்சி, ரிஷிவந்தியம், சங்கராபுரம், உளுந்தூர்பேட்டை இந்த நான்கு தொகுதியிலும் நம் வெற்றிச் சின்னம் 'உதயசூரியன்' உதித்தாக வேண்டும். உதயசூரியன் வெற்றிக்கு நீங்கள் அனைவரும் உழைக்க வேண்டும்.

உதயசூரியன் என்பது ஏதோ சும்மா சுவரில் வரைகிற சின்னம் கிடையாது. நம்ம உயிரோடு உணர்வோடு கலந்திருக்கக்கூடிய சின்னம் உதயசூரியன். அண்ணா கண்டெடுத்த சின்னம் உதயசூரியன். கலைஞர் நம்மிடம் கொடுத்துவிட்டுப் போன சின்னம் உதயசூரியன். நம் தலை வெற்றியை மட்டுமே பார்த்துக் கொண்டு இருக்கக்கூடிய சின்னம் உதயசூரியன். அந்த உதயசூரினின் வெற்றிக்கு அடுத்த 40 நாட்கள் நாம் உழைப்போம்.

தலைவர் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும். இந்தச் சிறப்பான வாய்ப்பைக் கொடுத்த உங்களின் மாவட்டக் கழகச் செயலாளர்கள் இரண்டு பேருக்கும், வந்திருக்கும் அனைத்து அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகளுக்கும் மீண்டும் என் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

மாவட்டக் கழகச் செயலாளர்களும், சட்டமன்ற உறுப்பினர்களுமான வசந்தம் கார்த்திகேயன், உதயசூரியன், நாடாளுமன்ற உறுப்பினர் மலையரசன், வடக்கு மாவட்ட அவைத் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான மணிக்கண்ணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கயற்கண்ணி, திருநாவுக்கரசு, கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் தங்க சித்தார்த்தன், எம்.கே.சிவா, மாவட்டக் கழக நிர்வாகிகள் ராமமூர்த்தி, காமராஜ், கோவிந்தராஜ், புவனேஸ்வரி பெருமாள், அண்ணாதுரை, ஆறுமுகம், பாப்பாத்தி நடராசன், வீரபாண்டியன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் தாகப்பிள்ளை, அருண்ராஜ், துணை அமைப்பாளர்கள் ராஜீவ் காந்தி, உதயா, சிலம்பரசன், பாலாஜி பூபதி, வி.எஸ். மணி, அசாருதீன், வி.எஸ்.அலெக்சாண்டர், பாண்டியன், குணசேகரன், எம்.பி.அருள், ஆர்.எஸ்.ஆஷிக், முகேன், சதாம் உசேன் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.